தினமலர்
[11.03.19]

# வாணியம்பாடி கல்லூரிகளில் மகளிர் தினவிழா

வாணியம்பாடி, மார்ச்11—

*வாணியம்பாடியில் உள்ள கல்லூரிகளில் சர்வதேச மகளிர் தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.*

வாணியம்பாடி பிரியதர்ஷினி பொறியியல் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் நடராஜன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக திருப்பத்தூர் நகரின் முதல் பெண் வக்கீல் மணிமொழி அனந்தகிருஷ்ணன் கலந்து கொண்டு, பெண்கள் பாதுகாப்புக்கான சட்டரீதியான விழிப்புணர்வு குறித்து பேசினார்.

இவரது மகள் வக்கீல் சினேகா, ஜாதி, மதமற்றவர் என சான்று பெற்றவர் ஆவர். விழாவில் கல்லூரி மாணவிகள், பேராசிரியைகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை பேராசிரியை ஷோபா செய்திருந்தார்.

[இதேபோன்று வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் செந்தில்ராஜ் தலைமை வகித்தார். துணை முதல்வர் நித்யா, நிர்வாகக்குழு ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக பாலாறு ஜேசீஸ் கிளப் தலைவர் தாகீர்உசேன், வாணி சிபிஎஸ்இ பள்ளி முதல்வர் மங்கையர்கரசி, ஞானாலயம் மற்றும் சினேகிதி மாத இதழ் ஆசிரியை மஞ்சுளா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மகளிர் தினத்தையொட்டி நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை பேராசிரியைகள் சக்திமாலா, செம்மலர் ஆகியோர் செய்திருந்தனர்.]

P. No. 9

தினமணி
[10.03.19]

# கல்லூரிகளில் மகளிர் தின விழா

வாணியம்பாடி, மார்ச் 9: வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் செந்தில்ராஜ் தலைமை வகித்தார். துணை முதல்வர் நித்யா, நிர்வாகக் குழு ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக ஜேசீஸ் பாலாறு சங்கத் தலைவர் தாகீர் உசேன், வாணி சிபிஎஸ்இ பள்ளி முதல்வர் மங்கையர்கரசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியருக்கு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வாணியம்பாடி பிரியதர்ஷிணி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவுக்கு, கல்லூரியின் முதல்வர் நடராஜன் தலைமை வகித்தார். திருப்பத்தூர் பெண் வழக்குரைஞர் மணிமொழி அனந்தகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார்.